தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 69 | 4 Pages | 7.10.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 69 | 4 பக்கங்கள் | 7.10.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமந் தரும்**

**விளக்கம்:**
**களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதலில் ஒருவனுக்கு உள்ளமிகுந்தவிருப்பம்,பயன்விளையும்போதுதொலையாதத் துன்பத்தைத் தரும்.**

# போஸ்னியாவில் கனமழை: நிலச்சரிவில் சிக்கி 16 பேர் பலி



ஜப்லானிகா,அக்.7

போஸ்னியாவில் கடந்த சில நாட்களாக கன மழைபெய்து வருகிறது. இதனால் ஜப்லானிகா, கொன்ஜிக் உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளக்காடாக மாறின.

அப்போது அங்குள்ள ஆற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு பல கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே அந்த கிராமங்களில் சிக்கிக் கொண்டவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.


இதனை தொடர்ந்து ஜப்லானிகா நகரில் உள்ள ஒரு கல்குவாரியில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ராட்சத பாறைகள் உருண்டு விழுந்தன. இதனால் அங்கிருந்த பல வீடுகள் மண்ணில் புதையுண்டன.

அப்போது நள்ளிரவு நேரம் என்பதால் தூங்கிக் கொண்டிருந்த அனைவரும் இந்த இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இதுகுறித்து பேரிடர் மீட்பு படையினருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் அங்கு விரைந்த மீட்பு படையினர் நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் முயற்சியில் துரிதமாக இறங்கினர். எனினும் இந்த நிலச்சரிவில் சிக்கி 16 பேர் பலியாகினர். படுகாயம் அடைந்த பலர் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலச்சரிவில் மேலும் பலர் மண்ணில் புதையுண்டதாக கூறப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கமாட்டோம்: அதிபர் மேக்ரானுக்கு நேதன்யாகு பதிலடி



டெல் அவிவ், அக். 7

பிரான்ஸ் வெளியுறவுத் துறை மந்திரி ஜீன் நோயல் பாரட் 4 நாள் அரசுமுறை பயணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார். நாளை அவர் இஸ்ரேல் சென்று தனது பயணத்தை முடிக்க உள்ளார்.

இதற்கிடையே, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் கூறுகையில், இஸ்ரேல் காசாமீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. அரசியல் ரீதியாக இதற்கு தீர்வு காண்பதற்காக இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தி உள்ளோம். போரை நிறுத்த மற்ற நாடுகளும் இதனை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு பிரான்ஸ் அதிபர் மேக்ரானுக்கு பதில் அளிக்கும் வகையில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், அதிபர் மேக்ரானும், மற்ற மேற்கத்திய தலைவர்களும் தற்போது இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதத் தடைக்கு அழைப்பு விடுக்கின்றனர். ஈரான் அதன் பினாமிகள் மீது ஆயுதத் தடையை விதிக்கிறதா? நிச்சயமாக இல்லை.

பயங்கரவாதத்தின் இந்த அச்சு ஒன்றாக நிற்கிறது. ஆனால் இந்த பயங்கரவாத அச்சை எதிர்க்கும் நாடுகள் இஸ்ரேல்மீது ஆயுதத் தடை விதிக்க வேண்டும். என்ன அவமானம்? அவர்களின் ஆதரவு இருந்தாலும் சரி, அல்லது இல்லாவிட்டாலும் சரி, இஸ்ரேல் வெற்றி பெறும் என உறுதிபட தெரிவித்துள்ளார்.

# 90 பாலியல் பலாத்கார சம்பவங்கள்.. கொடூர சீரியல் ரேப்பிஸ்ட்க்கு 42 ஆயுள் தண்டனை



தென்னாப்பிரிக்கா, அக். 7

தென்னாப்பிரிக்காவில் பல பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த கொடூர குற்றவாளிக்கு 42 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோசிநதி பகாதி என்ற நபர் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு கிழக்கே உள்ள எகுர்ஹுலேனி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துள்ளான். 2012 முதல் 2021க்கு இடைப்பட்ட 9 ஆண்டுகளில் 9 வயது சிறுமி முதல் 44 வயது பெண் வரை என 90 பாலியல் பலாத்கார சம்பவங்களில் இவன் ஈடுபட்டுள்ளான்.

பகாதியால் (Nkosinathi Phakathi) பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பள்ளிக்குழந்தைகள் என்று தென்னாப்பிரிக்காவின் தேசிய வழக்கு ஆணையம் (NPA) தெரிவித்துள்ளது.

பெண்கள் வேலைக்கும் போகும் போதும் பள்ளி மாணவிகள் பள்ளிக்குச் செல்லும்போதும் அவர்களை பின்தொடர்ந்து, கடத்தி பாலியல் பலாத்காரம் செய்துள்ளான். சில பெண்களை அவர்களின் சொந்த வீடுகளுக்கே சென்று எலக்ட்ரீஷியன் (Electrician) போல் நடித்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளான். கடந்த 2021ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டபோது, காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் பகாதி தனது காலை இழந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனைவி துர்காவுடன் விமான சாகசத்தை ரசித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக்.7

விமான சாகச நிகழ்ச்சியை பார்ப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மனைவி துர்காவுடன் மெரினா கடற்கரை பகுதிக்கு வந்தார்.

அங்கு அமைக்கப்பட்டு இருந்த நிழல் பந்தலில் மு.க.ஸ்டாலின், மனைவியுடன் விமான சாகசங்களை பார்த்தார். வெயில் அதிகமாக இருந்ததால் மு.க.ஸ்டாலினும், துர்கா ஸ்டாலினும் கூலிங்கிளாஸ் அணிந்து இருந்தனர். அவர்கள் கைதட்டி ரசித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,அமைச்சர்கள்,தலைமை ஏர்மார் ஷல் ஏ.பி.சிங் மற்றும் விமானப்படை அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் விமான சாகசத்தை கண்டு களித்தனர்.

விமான சாகசத்தை பார்ப்பதற்காக மெரினாவில் பொது மக்கள் திரண்டு இருந்தனர்.

இதனால் முக்கிய பிரமுகர்களுக்கு நிழல் பந்தல் அமைக்கப்பட்டு இருந்தது. அந்த பகுதியில் இருந்து சாகச நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊமச்சிகுளம் சந்தன மாரியம்மன் கோவிலில் நவராத்திரி விழா



மதுரை, அக்.7

மதுரை ஊமச்சிகுளம் அருகே உள்ள சந்தனமாரியம்மன் கோவிலில் நவராத்திரி விழா ஆரம்பம். ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து கொலு பொம்மைகளை பார்த்து சென்றனர். நவராத்திரி திருவிழாவில் நாள்தோறும் வெவ்வேறு அலங்காரத்தில் அம்மன் எழுந்தருள்கிறார். விழாவின் முதல் நாளான (ஆக.3) சந்தன மாரியம்மன் இராஜ ராஜேஸ்வரி அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார். 2வது நாளான (ஆக.4) வெள்ளிக்கிழமை சந்தன மாரியம்மன் இராஜ மாதங்கி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ந்து, நேற்று கோவில் மண்டபத்தில் கொழு பொம்மைகள் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. ஊமச்சிகுளம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் பொதுமக்கள் வருகை தந்து கொழு பொம்மைகளை பார்த்து சென்றனர். நவராத்திரி விழாவில் 9 நாட்களும் கொலு பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டு 9 வது நாளில் சந்தன மாரியம்மன் திரு விதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பார். சந்தன மாரியம்மன் அலங்காரத்தை சிவஸ்ரீ ராஜா குருக்கள் சிறப்பாக செய்திருந்தார்.

# எண்டியூர் கிராமத்திலுள்ள மந்தன்கன் ஏரி மற்றும் சித்தேரி ஏரியில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, பணியினை கலெக்டர் துவக்கி வைத்தார்



விழுப்புரம், அக்.7

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டத்தின்கீழ், எண்டியூர் கிராமத்திலுள்ள மந்தன்கன் ஏரி மற்றும் சித்தேரி ஏரியில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, பணியினை துவக்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், எண்டியூர் கிராமத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டத்தின்கீழ், மந்தன்கன் ஏரி மற்றும் சித்தேரி ஏரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி 05.10.2024 மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் பணியினை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடு அனைத்துத்துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் ஒவ்வொரு துறைக்கும்பலசிறப்புத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின்கீழ், பல்வேறு சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தி மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 2024 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், மீன்வளம் மற்றும் மீன்வளத்துறையின்கீழ், கிராமப்புறங்களில் மீன் உற்பத்தியினை அதிகரித்திட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும் என அறிவிப்பினை வெளியிட்டார்கள். இத்திட்டத்தின் கீழ், விழுப்புரம் மாவட்டத்தில், 150 ஹெக்டேரில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம், மரக்காணம் வட்டம், எண்டியூர் கிராமத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், மந்தன்கன் மற்றும் சித்தேரி ஏரியில் 73.87 ஹெக்டேர் பரப்பளவில் 1,47,740 மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இருப்பு செய்யப்படும் மீன்களாக இந்திய பெருங்கெண்டை, விரால், கட்லா மற்றும் ரோகு மிருகால்ஆகும்.இதன்வளர்ப்பு காலம் 4 முதல் 6 மாதம் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம் மாவட்டத்தில், முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முகையூர்கி ராமத்தில், உள்ளதங்கல் ஏரியில் 5 ஹெக்டேர் பரப்பளவில் 10,000 மீன்குஞ்சுகளும், காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லாபாளையம் கிராமத்தில் பாளையம் ஏரியில் 4 ஹெக்டேர் பரப்பளவில் 8,000 மீன்குஞ்சுகளும், அரியூர் கிராமத்தில், புளிச்சங்களேரியில் 2.5 ஹெக்டேர் பரப்பளவில் 5,000 மீன்குஞ்சுகளும், உடையானத்தம் கிராமத்தில் பெரியேரியில் 5.26 ஹெக்டேர் பரப்பளவில் 10,520 மீன்குஞ்சுகளும், கூனூர் கிராமத்தில்கூனூர்ஏரியில் 4.51 ஹெக்டேர் பரப்பளவில் 9,020 மீன்குஞ்சுகளும், மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடலப்பாக்கம் கிராமத்தில் வடலப்பாக்கம் ஏரியில் 4.71 ஹெக்டேர் பரப்பளவில் 9,420மீன்குஞ்சுகளும், எண்டியூர் கிராமத்தில் பெரியேரியில் 50.15 ஹெக்டேர் பரப்பளவில் 1,00,300 மீன்குஞ்சுகளும், மந்தன்கன் ஏரியில் 30.05 ஹெக்டேர் பரப்பளவில் 60,100 மீன்குஞ்சுகளும், சித்தேரி ஏரியில் 43.82 ஹெக்டேர் பரப்பளவில் 87,640 மீன்குஞ்சுகள் என மொத்தம் 150ஹெக்டேர்பரப்பளவில்3,00,000 மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குநர், மீன்வளம்மற்றும் மீனவர்நலத்துறை நித்திய பிரியதர்ஷினி, மரக்காணம் வருவாய் வட்டாட்சியர் சிவா எண்டியூர்ஊராட்சி மன்றதலைவர்ராஜாராம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கோவை மாநகராட்சி 35 வது வார்டுக்கு உட்பட்ட ஆட்டோ நகர் 2வது வீதியில் புதிய மழை நீர் வடிகால் கட்டும் பணிகள் துவங்கப்பட்டது என்றும் மக்கள் பணியில் சம்பத் 35 வது வட்ட மாமன்ற உறுப்பினர் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர் உள்ளனர்.

# ராகுல் காந்திக்கு எதிராக பாஜகவின் அவதூறு பிரச்சாரம் குறித்து காங்கிரஸ் கட்சி சார்பில் விழிப்புணர்வு நடைபயணம்

ராமநாதபுரம் , அக்7

ராமநாதபுரத்தில் நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக பாஜக.,வின் அவதூறு பிரசாரம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ராமநாதபுரத்தில் மாவட்ட காங் சார்பில் பிரசார நடைபயணம், நடைபெற்றது. கருமாணிக்கம் எம்எல்ஏ தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் வேலுச்சாமி முன்னிலை வகித்தார். மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் ராஜாராம் பாண்டியன் வரவேற்றார். மாநில துணைத்தலை வர் இதயத்துல்லா, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் செல்லத்துரை அப்துல்லா, தேசிய மீனவர் காங் தலைவர் ஆம்ஸ்ட்ராங் பேசினர். நகர் தலைவர் கோபி நன்றி கூறினார்.




திண்டிவனம் அடுத்த சாரம் அரசினர் மேல்நிலைப்பள்ளி நாட்டு நல பணித்திட்ட முகாமின் நிறைவு விழாவில் சிறப்பாக செயல்பட்ட மாணவ மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர். பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது இதில் பள்ளி தலைமை ஆசிரியை திருமதி எஸ் சுமதி உதவி தலைமை ஆசிரியர் இரா . அனந்தராமன் கணித ஆசிரியர் சரவண செந்தில்குமார் தாவரவியல் ஆசிரியர் பூபாலன் ஆகியோர் பங்கு பெற்றனர். திட்ட அலுவலர் உ. ஜெயப்பிரியாவின் நன்றி உரையுடன் முகாம் இனிதே நிறைவுற்றது.

# மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி



திருப்பூர், அக். 7

திருப்பூர் இடுவம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் ராஜன் பென்னி (வயது 67), ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி. இவர் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் ஏரோநாட்டிக்கல் பிரிவில் பயிற்சியாளராக பணிபுரிந்து வந்தார்.

திருப்பூரில் இருந்து தினந்தோறும் ரெயில் மூலமாக கோவையில் உள்ள கல்லூரிக்கு பணிக்கு சென்று வந்துள்ளார் .

கடந்த 1ந்தேதி பணிக்கு சென்றவர் இரவு வீடு திரும்பவில்லை. உறவினர்கள்ராஜன்பென்னியை காணவில்லை என திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர்.

தொடர்ந்து திருப்பூர் மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ரெயில் நிலையத்திலிருந்து அவர் வழக்கமாக செல்லும் பாதைகளில் உள்ள சிசிடிவி., கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அதில் ரெயில் நிலையத்தில் இருந்து கல்லூரி சாலை, அய்யப்பன் கோவில் அடுத்த சூசையாபுரம் செல்லும் ரெயில்வே சுரங்க பாலம் வழியே கடந்த 1ந் தேதி இரவு திரும்பியுள்ளார். அதன் பிறகு கண்காணிப்பு கேமராக்களில் அவர் சென்றது பதிவாகவில்லை.

எனவே அப்பகுதியில் உள்ள அகன்ற சாக்கடை கால்வாயில் விழுந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று இரவு முதல் திருப்பூர் வடக்கு தீயணைப்பு துறையினர் மற்றும் போலீசார் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது சூசையாபுரத்தில் இருந்து ராயபுரம் செல்லும் வழியில் உள்ள சாக்கடை கால்வாயில் அவரது இருசக்கர வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது. அவரது உடல் வேறு பகுதிக்கு அடித்துச் சென்று இருக்கலாம் என்ற அடிப்படையில் போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் தொடர்ந்து தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 1ந்தேதி இரவு திருப்பூரில் கனமழை பெய்தது. அப்போது ராஜன் பென்னி ரெயில் நிலையத்தில் இருந்து தனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வழக்கமான பாதையில் திரும்பியுள்ளார். சூசையாபுரம் சுரங்கப்பாலத்தில் தேங்கியிருந்த மழைநீரை கடந்து செல்ல முயன்ற போது தண்ணீரில் அடித்து செல்லப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# விமான சாகச நிகழ்ச்சி.. போக்குவரத்து நெரிசலில் சிக்கித் திணறும் சென்னை



சென்னை, அக். 7

இந்திய விமானப்படையின் 92ம் ஆண்டு கொண்டாட்டத்தையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் இன்று விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் 72 விமானங்களில் வீரர்கள் சாகச நிகழ்ச்சியை நடத்தி காட்டினார்கள். காலை 11 மணிக்கு தொடங்கிய இந்த சாகச நிகழ்ச்சியை காண மெரினா கடற்கரையில் லட்சக்கணக்கானோர் திரண்டனர்.

இதற்கு முன்பு கடந்த 2003ம் ஆண்டு விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பிறகு 21 வருடங்கள் கழித்து மீண்டும் சென்னையில் நடைபெறும் விமான சாகச நிகழ்ச்சி என்பதால் அதனை கண்டு ரசிக்க பொதுமக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வம் இருந்தது.

விமான சாகச நிகழ்ச்சியை பார்ப்பதற்காக கோவில் திருவிழாக்களுக்கு செல்வது போன்று கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் மெரினா கடற்கரை நோக்கி பொதுமக்கள் குடும்பத்தோடு படையெடுத்தனர். மேலும் பலர் அரசு பேருந்து மற்றும் மின்சார ரெயில்களில் பயணம் மேற்கொண்டனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாது சிறுவர்கள் முதல் வயதான பெரியவர்கள் வரை அனைவருமே விமான சாகச நிகழ்ச்சியை கைதட்டி ரசித்து மகிழ்ச்சி ஆரவாரத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

இருப்பினும், வான் சாகச நிகழ்ச்சி நடைபெறுவதை ஒட்டி போதிய ரெயில்களை தெற்கு ரெயில்வே இயக்கவில்லை என மக்கள் குற்றச்சாட்டி உள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை தினமான இன்று அரை மணி நேரத்திற்கு ஒரு ரெயில் இயக்கப்படுவதால் வேளச்சேரி, சிந்தாதிரிப்பேட்டை உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் ரெயிலுக்காக காத்திருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

விமான சாகச நிகழ்ச்சியை காண பல்வேறு பகுதிகளில் இருந்து சென்னைக்கு மக்கள் வருவதால் பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

# திருக்கல்யாண நிகழ்ச்சியில் மேள, தாளங்கள் முழங்க நடனமாடி பெருமாளுக்கு மாலை அணிவித்த முன்னாள் அமைச்சர்



கோபி ,அக். 7

புரட்டாசி மாதம் பிறந்தது முதலே ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருமாள் கோவில்களில் ஏராளமான பக்தர்கள் வந்துசாமிதரிசனம்செய்து வருகிறார்கள். குறிப்பாக புரட்டாசி சனிக்கிழமை பெருமாள் கோவில்களில் வழக்கத்தை விட அதிகளவில் பக்தர்கள் கோவிலுக்கு வந்து பெருமாளை வழிபட்டு வருகிறார்கள்.

மேலும் பக்தர்கள் பலர் புரட்டாசி சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து பெருமாளை தரிசனம் செய்த பின்னரே உணவு அருந்துகின்றனர். இந்த நிலையில் புரட்டாசி பிறந்து 3வது சனிக்கிழமையான நேற்று வெகு விமர்சையாக பெருமாள் கோவில்களில் ஸ்ரீதேவி பூதேவி சமேதன உடன் பெருமாள் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

இதே போல் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள குள்ளம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனமர்வரதராஜ பெருமாள் கோவிலில் நேற்று புரட்டாசி சனிக்கிழமை என்பதால் சிறப்பு வழிபாடு நடந்தது. இதில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த 100க்கணக்கான பக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதை தொடர்ந்து கோவிலில்பெருமாளுக்கு திருக்கல்யாண நிகழ்ச்சி நடந்தது. இதில் மேள தாளங்கள் முழங்க வேத மந்திரங்களுடன் ஸ்ரீதேவி பூதேவி உடனமர்வரதராஜ பெருமகளுக்கு திருக்கல்யாணம் நடந்தது.

இதில் முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். இதை தொடர்ந்து மேள தாளங்கள் முழங்க சுவாமிக்கு திருக்கல்யாணம் முடிந்து மாலை மாற்றும் நிகழ்ச்சி நடந்தது.

மேளதாளங்கள்வாசிக்க அதற்கேற்றார் போல் ஸ்ரீதேவி பூதேவி பெருமாள் சமேதரமாக காட்சி அளித்த பெருமாளுக்கு மாலை மாற்றப்பட்டது.

அப்போது செங்கோட்டையன் எம்.எல்.ஏ. ஆடி, பாடி நடனமாடி மகிழ்ந்தார்.

இதை தொட ர்ந்து அவர் இசைக்கேற்றப்படி ஆடி கொண்டு சுவாமிக்கு மாலை அணிவித்தார். இதை கண்டு பக்தர்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.

இந்த வீடியோ காட்சிகள் வாட்ஸஅப், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வளைத்தலங்களில் பரவி வருகிறது. இதை ஒருவருக்கொருவர் பரிமாறி கொண்டனர்.

# பைக் மீது கண்டெய்னர் லாரி மோதியதில் 3 கல்லூரி மாணவர்கள் பலி



குள்ளனம்பட்டி, அக். 7

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அசோக்நகரை சேர்ந்தவர் தினகரன் (வயது20). இவர் வேலம்பட்டியை சேர்ந்த பாலாஜி (19) மற்றும் ஒரு நண்பருடன் மோட்டார் சைக்கிளில் நத்தம் சாலையில் சென்று கொண்டிருந்தார். கோபால்பட்டியை அடுத்த ஜூஸ் தொழிற்சாலை அருகே சென்ற போது எதிரே வந்த கண்டெய்னர் லாரி பைக் மீது பயங்கரமாக மோதியது.

இதில் 3 பேரும் தூக்கி வீசப்பட்டனர். இதில் பாலாஜி மற்றும் அவருடன் வந்த நண்பர் ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். படுகாயம் அடைந்த தினகரன் உயிருக்கு ஆபத்தான நிலையில் திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்த போதும் சிகிச்சை பலனின்றி தினகரன் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து சாணார்பட்டி சப்இன்ஸ்பெக்டர் பொன்குணசேகர் தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த 3 பேரும் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஜூஸ் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் லாரிகள் அதிவேகமாக வருவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாக குற்றம்சாட்டி அப்பகுதி பொதுமக்கள் சம்பவ இடத்தில் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சம்பவம் குறித்து அறிந்தும் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி தலைமையிலான போலீசார் விரைந்து சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்ததால் அவர்கள் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

# 15 மாவட்ட மக்களே உஷார்: வெளுத்து வாங்கப்போகும் கனமழை

சென்னை, அக். 7

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தெற்கு ஆந்திரா வடதமிழககடலோரப்பகுதிகளை ஒட்டிய மத்தியமேற்கு தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் நாளை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி, ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

8ந்தேதி தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, கரூர், விருதுநகர், தூத்துக்குடி, ராமநாதபுரம்,புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

9ந்தேதி தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, சிவகங்கை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

10ந்தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

11ந்தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, விருதுநகர், மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

12ந்தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி லட்டு சர்ச்சை: மக்களை திசைதிருப்பும் செயல் முத்தரசன்



கோவை, அக். 7

இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன் கோவையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

இஸ்ரேல் நாட்டில் இன அழிப்பு போர் கண்டனத்துக்கு உரியது. இது உலகளவில் மிகப்பெரிய பதற்றத்தைஏற்படுத்திஉள்ளது. இந்தியாவை பொறுத்தவரை முன்னாள் பிரதமர் நேரு பாலஸ்தீனத்தைதனி நாடாக அங்கீகரிக்கும் நிலைப்பாட்டை மேற்கொண்டார்.

ஆனால் தற்போது இஸ்ரேலுக்கு ஆதரவான இந்தியாவின் நிலைப்பாடு முற்றிலும் எதிரானது. எனவே நமது தேசம் இனஅழிப்புக்கு எதிராக செயல்பட வேண்டும். இதை வலியுறுத்தி இடதுசாரிகள் சார்பில் நாளை நாடு தழுவிய போராட்டம் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரத்தில் தனியார் செல்போன் நிறுவனத்தில் பணியாற்றும் 1500 தொழிலாளர்கள் தங்களுக்கென சங்கம் அமைத்துக்கொள்ள விரும்புகின்றனர்.இதற்கு அவர்களுக்கு சட்டரீதியாக உரிமை உண்டு. இந்த விஷயத்தில் தலையிட்டு 3 அமைச்சர்கள் குழுவை அமைத்து தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைக்கு நன்றி.

கோவை மாவட்டத்தில் பழங்குடி மக்களை ஏமாற்றி அவர்களின்நிலங்களை அபகரித்து ஆக்கிரமிக்கும் போக்கு அதிகளவில் நடந்து வருகிறது. மேலும் வனத்துறையினர் பழங்குடியிருனக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்து நவீன விடுதிகளை அமைத்து வருகின்றனர். இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு புகார் தரப்பட்டு உள்ளது. இதில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்த பிரச்சனை குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

காவல்துறை, வனத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் தனிப்பட்ட உரிமையாளருக்கு ஆதரவாக செயல்படுவது ஆபத்தானது. எனவே வனத்துறை அமைச்சர் பழங்குடி மக்களையும், வனங்களையும் பாதுகாக்க வேண்டும்.

மின்கட்டண உயர்வு சிறுகுறு தொழில்களை பாதித்து உள்ள விஷயத்தை முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்து சென்று உள்ளோம். தேர்தலுக்கு பிறகு மின்கட்டண உயர்வு குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமென சொன்ன மாநில அரசு, மின்கட்டண உயர்வில் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ராஜபாளையம் பகுதியில் மூடப்பட்ட நூற்பாலை தொழிலை காப்பாற்ற, மூலப்பொருட்கள் கிடைக்க மத்தியமாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பதி லட்டில் மாட்டு கொழுப்பு இருப்பதாக ஆந்திர முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு தெரிவித்து உள்ளார். ஆனால் அனைத்திலும் அரசியல் செய்கிறீர்கள். கடவுளையாவது விட்டு வையுங்கள் என சுப்ரீம் கோர்ட்டு கண்டித்து விசாரணை குழுவும் அமைத்து உள்ளது. அனைத்து பொருட்களின் விலைவாசியும் உயர்ந்து விட்டது. நிறைய பிரச்சனைகள் உள்ள நிலையில் மக்களை திசை திருப்ப அற்பத்தனமாக அரசியல் செய்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவில் பிரச்சனை குறித்து பேச்சுவார்த்தை டி.எஸ்.பி., காலில் விழுந்து கதறி அழுத பக்தர்



தாராபுரம், அக். 7

திருப்பூர்மாவட்டம்தாராபுரம் அருகே உள்ள பெரமியம் கிராமத்தில் பஜனை கோவில் உள்ளது. இங்கு ராமர் உருவ படம் வைத்து குறிப்பிட்ட ஒரு பிரிவினர் பல ஆண்டுகளாக வழிபாடு நடத்தி வந்தனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அதே பிரிவை சேர்ந்த அண்ணாதுரை உட்பட 25 குடும்பங்களை ஊரை விட்டு தள்ளி வைத்தும், பஜனை கோவில் விழாவில் கலந்து கொள்ளக்கூடாது என கடும் கட்டுப்பாடுகளை ஒரு தரப்பினர் விதித்தனர்.

இதையடுத்து 25 குடும்பத்தைசேர்ந்தோர்சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுதாரர் அண்ணாதுரை மூலம் மனு தாக்கல் செய்தனர். எதிர் தரப்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் இரு பிரிவுகளாக செயல்படாமல் ஒரே பிரிவாக செயல்பட வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து பஜனை கோவில் விழாவை நடத்த வேண்டும் என தீர்ப்பு வழங்கியது.

ஆனால் மற்றொரு தரப்பினர் நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல் தங்களுக்கென ஒரு தேதியை தேர்ந்தெடுத்து அதில் விழா கொண்டாட தொடங்கினர். இந்தநிலையில் இந்த பிரச்சனை தொடர்பாக இரு தரப்பினர் இடையே அமைதி பேச்சுவார்த்தை தாராபுரம் தாசில்தார் அலுவலகத்தில் தாசில்தார் திரவியம் மற்றும் போலீஸ் டி.எஸ்.பி., தினேஷ்குமார் ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது.

நீதிமன்ற உத்தரவின்படி கிராம விழாவை இருதரப்பும் இணைந்து நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்ணாதுரை தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். மேலும் காவல்துறை அதிகாரி ஒருவரும் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் சிலரும் , நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் மற்றொரு தரப்பிற்கு சாதகமாக செயல்படுவதாக கூறியும், நீதிமன்ற உத்தரவை மதித்து நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுத்தும் டி.எஸ்.பி., தினேஷ் குமாரின் காலில் விழுந்து அண்ணாதுரை கதறி அழுதார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அங்கிருந்த போலீசார் அவரை தூக்கி விட்டு ஆறுதல் தெரிவித்தனர்.

ஆனால் பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு ஏற்படவில்லை. இதையடுத்து நீதிமன்றத்தில் மீண்டும் மேல்முறையீடு செய்ய உள்ளதாக அண்ணாதுரை தெரிவித்தார்.

# சங்கரன்கோவிலில் போதை ஒழிப்பு பிரமாண்ட பேரணி: கவர்னர் ஆர்.என்.ரவிசைதை துரைசாமி பங்கேற்பு



தென்காசி, அக். 7

வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் சார்பில் இன்று சங்கரன்கோவிலில் மாபெரும் போதை ஒழிப்பு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இன்று காலை சங்கரன்கோவில் பழைய பஸ்நிலையத்தில்தொடங்கிய பேரணியில் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி மற்றும் ஜோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு, ரோட்டரி கிளப் நிர்வாகிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

மேளதாளங்கள் முழங்க பேரணியானது பொதுக் கூட்டம் நடைபெறும் மேடை வரை 2 கிலோமீட்டர் சென்றடைந்தது. பின்னர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழக கவர்னர் ஆர்.என். ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இதற்காக சங்கரன்கோவில் வந்த கவர்னர் ஆர். என்.ரவி முதலில் சங்கர நாராயணர் கோவிலில் சாமி தரிசனம் செய்ய சென்றார். அவரோடு ஜோகோ முதன்மை செயல் அதிகாரி ஸ்ரீதர் வேம்பு, மனிதநேயம் ஐ.ஏ.எஸ். அகாடமி நிறுவனர் சைதை துரைசாமி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக நடைபெற்ற பேரணியில் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி, ஜோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு, பா.ஜ.க. பொருளாளர் எஸ்.ஆர். சேகர் மற்றும் ஏராளமானோர் பங்கேற்றனர்.

மேலும் பேரணியில் பங்கேற்க விருப்பம் தெரிவித்திருந்த பெண்கள், இளைஞர்கள் வாய்ஸ் ஆப் தென்காசி இணையதளத்தில் பதிவு செய்திருந்தனர். அவர்கள்தங்கள் பெற்றோருடன் கலந்து கொண்டனர்.

பொதுக் கூட்ட மேடையில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் போதை விழிப்புணர்வு பற்றிய கருத்தரங்கு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தின் போது அனைவரும் போதை பொருட்களுக்கு எதிராக ஒருசேர உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

# `யூ டியூப் சேனல்' தொடங்க பயிற்சி வகுப்பு: பொதுமக்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, அக். 7

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறி இருப்பதாவது:

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சென்னையில் "யூடியூப் சேனலை உருவாக்குதல் தொடர்பான பயிற்சியானது வரும் 16.10.2024 முதல் 18.10.2024 வரை மூன்று நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரையில் இந்நிறுவனத்தின் கட்டிட வளாகத்தில் நடை பெற உள்ளது.

"சொந்தமாக யூடியூப் சேனலை உருவாக்குதல், வீடியோ மற்றும் ஸ்லைடு ஷோ உருவாக்கம், சமூக ஊடக சந்தைப்படுத்தல், சமூக ஊடகங்களை இணைத்தல், வாடிக்கையாளர் வலையமைப்பை எவ்வாறு அதிகரிப்பது, பயனுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு ஆன்லைன் மார்க்கெட்டிங் டொமைன் பெயர் ஹோஸ்டிங் இணையதள வடிவமைப்பு நுட்பங்கள், சைபர் குற்றம், பாலிசி மற்றும் விதிகள் ஆகிய தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சியில் நீங்கள் எவ்வாறுயூடியூப்சேனலை எவ்வாறு உருவாக்குதல் மற்றும் பொருட்களை சந்தைப்படுத்தல் தொடர்பாக நேரடி பயிற்சி வகுப்பின் மூலமாக கற்றுக் கொடுக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் ஆண், பெண் மற்றும் திருநங்கைகள் 18 வயதிற்கு மேற்பட்ட, குறைந்தப்பட்ச கல்வித் தகுதியாக 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சியில் பங்கு பெறும் ஆண், பெண் மற்றும் திருநங்கைகள் தங்கி பயில்வதற்கு ஏதுவாக குறைந்த கட்டண வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து முன் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், இப்பயிற்சிப் பற்றிய விவரங்களை அறிய/பெறவிரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்துக் கொள்ளலாம். அலுவலக வேலை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

தமிழ் நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இ.டி.ஐ.ஐ அலுவலக சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை600 032. 8668 100181, 9841 336033 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். முன்பதிவு அவசியம். பயிற்சியின் முடிவில் அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிதம்பரம் அருகே பிறந்து சில மணி நேரமே ஆன பெண் குழந்தை தோட்டத்தில் வீச்சு



சிதம்பரம், அக். 7

சிதம்பரம் அருகே உள்ள தெற்கு பிச்சாவரம் செஞ்சி காலனி மாதா கோவில் தெருவில் பால்ராஜ் என்பவரது வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தில் இன்று காலை குழந்தையின் அழுகுரல் கேட்டது.

இதனை கேட்ட அப்பகுதி மக்கள் அங்கு சென்று பார்த்துள்ளனர். அப்பொழுது பிறந்த சில மணி நேரங்களே ஆன பெண் குழந்தை அங்கு கிடப்பது தெரியவந்தது. இதையடுத்து அப்பகுதி மக்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

தகவலின் பேரில் 108 வாகனத்துடன் அங்கு வந்த போலீசார் குழந்தையை மீட்டு சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு குழந்தைக்கு தேவையான சிகிச்சைகள் செய்யப்பட்டு கடலூரில் உள்ள குழந்தை சிசு பாதுகாப்பு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து பிறந்த பெண் குழந்தையை விட்டு சென்றது யார்? என விசாரணை செய்து வருகின்றனர்.

# கன்னியாகுமரியில் அலைமோதிய சுற்றுலாப் பயணிகள்

கன்னியாகுமரி, அக். 7

ஞாயிற்றுக்கிழமை விடுமுறையையொட்டி கன்னியாகுமரியில் இன்று ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலி துறை கடற்கரை பகுதியில் இன்று அதிகாலையில் சூரியன் உதயமாகும் காட்சியை பார்த்து ரசித்தனர்.



இதற்காக கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் அதிகாலையில் இருந்தே ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து இருந்தனர். கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் ஏராளமான சுற்றுலாp பயணிகள் கடலில் ஆனந்த குளியல் போட்டனர்.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், திருப்பதி வெங்கடாஜலபதி, சுசீந்திரம் தாணுமாலை சுவாமி கோவில், கொட்டாரம் ராமர் கோவில் போன்ற கோவில்களில் தரிசனத்துக்காக பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட இன்று காலை 6 மணியில் இருந்தே சுற்றுலா பயணிகள் படகுத்துறையில் நீண்ட கியூவில் காத்திருந்தனர்.

வழக்கம்போல் இன்று காலை 8 மணிக்கு படகுப் போக்குவரத்து தொடங்கி நடைபெற்று வருகிறது. சுற்றுலாப் பயணிகள் 2 மணி நேரம் வரிசையில் காத்திருந்து படகில் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டனர்.

மேலும் கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலாத் தலங்களான காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள பேரூராட்சி பொழுது போக்கு பூங்கா, அரசு பழத்தோட்டத்தில் உள்ள சுற்றுச்சூழல் பூங்கா, கலங்கரை விளக்கம், சன்செட் பாயிண்ட் கடற்கரை பகுதி, மியூசியம், அரசு அருங்காட்சியகம், விவேகானந்தபுரத்தில் உள்ள பாரத மாதாகோவில் மற்றும் ராமாயண தரிசன சித்திர கண்காட்சிகூடம், சுதந்திர போராட்ட வீரர்களின் தியாக பெருஞ்சுவர், மீன் காட்சி சாலை, வட்டக் கோட்டை கடற்கரை, கோவளம் பீச், சொத்த விளை பீச் உள்பட அனைத்து சுற்றுலாத் தலங்களையும் இன்று காலையில் இருந்தே சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் குதூகலத்துடன் பார்வையிட்டு விடுமுறையை கொண்டாடினார்கள். இதனால் விடுமுறை நாளான இன்று சுற்றுலா தலங்களை கட்டியது.

இந்த சுற்றுலா தலங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. கடற்கரைப் பகுதியில் சுற்றுலாப் போலீசாரும் கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

# அரசு ஆஸ்பத்திரியில் பெண்ணின் வயிற்றில் இருந்த 5 கிலோ கட்டியை அகற்றி டாக்டர்கள் சாதனை

மணப்பாறை, அக். 7

மணப்பாறையை அடுத்த வடுகபட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் கலா. இவர் வயிற்று வலி ஏற்பட்டு மணப்பாறையில் உள்ள காமராஜர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு சென்றார்.




டாக்டர்கள் அவரை ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளும்மாறு கூறினர்.

அந்த பெண்ணிற்கு ஸ்கேன் செய்து பார்த்த போது வயிற்றில் கர்ப்பபை கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால் அந்த கர்ப்பபை கட்டியை உடனடியாக அறுவை சிகிச்சை மூலம் அகற்றிட வேண்டும் என்ற நிலையும் இருந்தது.

இதனிடையே அந்த பெண்ணின் ரத்தத்தின் அளவு 4 எச்.பி. புள்ளி மட்டுமே இருந்துள்ளது. சராசரியாக 10 க்குள் மேல் இருந்தால் மட்டுமே அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியும் என்ற நிலையை உணர்ந்த மருத்துவக்குழுவினர் இதுதொடர்பாக குடும்பத்தினரிடம் பேசி அந்த பெண்ணிற்கு கிடைக்க வேண்டிய தொடர் சிகிச்சை முறைகளை தொடர்ந்தனர்.

மேலும் ரத்ததின் அளவை அதிகரிக்க 4 யூனிட் ரத்தமும் அந்த பெண்ணிற்கு செலுத்தப்பட்டு உடல் நிலையை மேம்படுத்துவதற்கான அனைத்து சிகிச்சை முறைகளும் சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து

அந்த பெண்ணிற்கு மீண்டும் ரத்த அளவு பரிசோதனை செய்யப்பட்ட போது 11 புள்ளிகளை கடந்ததுடன் உடலும் அறுவை சிகிச்சை செய்யும் அளவிற்கு தேறி வந்ததை அறிந்து நேற்று அறுவை சிகிச்சை மூலம் கட்டியை அகற்றிட மருத்துவக்குழுவினர் முடிவு செய்தனர்.

அதன்படி தலைமை மருத்துவர் தமிழ்மணி மேற்பார்வையில் மகப்பேறு அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர்கள் மஜிதா, விஜயா மயக்கவியல் மருத்துவ நிபுணர் மலைதுரை, அறுவை சிகிச்சை அரங்க செவிலியர்கள் அம்சவள்ளி, ராஜலெட்சுமி, ஜோன் ஆப் ஆர்க் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவ குழுவினர் அறுவை சிகிச்சை தொடங்கினர்.

சில மணி நேரம் நடைபெற்ற அறுவை சிகிச்சைக்குப்பின் பெண்ணின் வயிற்றில் இருந்த பிரமாண்ட அளவிலான 5 கிலோ கட்டி அகற்றப்பட்டது. இதையடுத்து அந்தப் பெண் அறுவை சிகிச்சைக்குப்பின் உள்ள மருத்துவ அறைக்கு மாற்றப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

குறைந்த அளவு உடலில் ரத்தம் இருந்ததோடு 5 கிலோ எடையுள்ள கட்டி வயிற்றில் இருந்ததால் கடும் அவதிக்கு ஆளாகி வந்த வந்த பெண்ணுக்கு தனியார் மருத்துவமனையை மிஞ்சும் அளவில் எந்தவித செலவுமின்றி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மூலம் அகற்றி அசத்தி உள்ளது அனைவரின் பாராட்டையும் பெற்று வருகின்றது.

ஏற்கனவே இதுபோன்ற அறுவை சிகிச்சை மணப்பாறை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டாலும் கூட 5 கிலோ எடையுள்ள கட்டியை அகற்றி இருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்து தனித்துவம் பெற்று வருகின்றது.

அரசு மருத்துவமனை என்றால் அலட்சியம் நிறைந்து இருக்கும் என்று சொல்லப்படும் நிலையில் பெண்ணுக்கு 5 கிலோ கட்டி கடும் சவாலான நிலையில் அகற்றி இருப்பது தான் சிறந்து வாய்ந்ததாக அமைந்துள்ளது.

# விமான சாகச நிகழ்ச்சி: கூட்ட நெரிசலில் சிக்கி 20 பேர் திடீர் மயக்கம்



சென்னை, அக். 7

மெரினா கடற்கரையில் நடைபெற்ற விமான சாகசத்தை பார்க்க 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் குவிந்து இருந்தனர்.

இதனால் கடற்கரையில் கூட்டம் அலைமோதியது. விமானங்கள் சீறிப் பாய்ந்த போது பொதுமக்கள் உற்சாக குரல் எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

கூட்ட நெரிசல் மற்றும் அதிக வெப்பம் காரணமாக குழந்தைகள் உள்பட 20க்கும் மேற்பட்டோர் மயக்கம் அடைந்தனர். அவர்களுக்கு அங்கு தயாராக இருந்த ஆம்புலன்சில் உடனடியாக முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

# பவன் கல்யாணுக்கு நன்றி தெரிவித்த இபிஎஸ்

சென்னை அக். 7

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

சமத்துவம் சமூகநீதி தழைக்க, ஜாதிமதசார்பற்று அனைவரும் அனைத்தும் பெற, புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் கண்டெடுத்து, புரட்சித்தலைவி வளர்த்த, எனது தலைமையிலான மாபெரும் இயக்கமாம் அதிமுகவின் 53வது



துவக்க விழாவை முன்னிட்டு வாழ்த்து தெரிவித்த ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாணுக்கு நன்றி என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 'புரட்சித் தலைவர் எம்ஜிஆர்' மீதான எனது அன்பும் அபிமானமும், சென்னையில் நான் வளர்ந்ததில் ஒரு அங்கம். அது இன்னும் அப்படியே இருக்கிறது. 'அதிமுகவின் 53வது தொடக்க நாளான அக் 17ஆம் தேதி புரட்சித் தலைவரின் அன்பர்கள், அபிமானிகள், ரசிகர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள் என்று பவன் கல்யாணம் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 3.57 லட்சம் பேருக்கு கேன்சர் சோதனையில் 53 பேருக்கு உறுதி




ஈரோடு, அக். 7

ஈரோடு மாவட்டத்தில் 73 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 18 நகர்புற நலவாழ்வு மையங்கள், 98 கிராமப்புற துணை சுகாதார நல வாழ்வு மையங்கள், 8 அரசு மருத்துவமனைகள், ஒரு அரசு மருத்துவக் கல்லூரி மையம் என 198 சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை மையங்களில் இலவச புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. முகாமில் மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் பரிசோதனை செய்வதுடன், இல்லம் தேடி சென்றும் பரிசோதனை நடத்துகின்றனர்.

இத்திட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் 4 லட்சத்து 23 ஆயிரத்து 478 பேருக்கு வாய் புற்றுநோய் பரிசோதனை, 2 லட்சத்து 21 ஆயிரத்து 765 பேருக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை, 2 லட்சத்து 21 ஆயிரத்து 816 பேருக்கு கர்ப்பப்பை புற்றுநோய் பரிசோதனைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதில் 2 லட்சத்து 8 ஆயிரத்து 699 பேர் வாய் புற்றுநோய் பரிசோதனை செய்ததில் 22 பேருக்கு புற்றுநோய் இருப்பது தெரிய வந்தது. 86 ஆயிரத்து 63 பேருக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை செய்ததில் 22 பேருக்கும், 62 ஆயிரத்து 880 பேருக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை செய்ததில் 9 பேருக்கும் புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

மொத்தம் 3 லட்சத்து 57 ஆயிரத்து 642 பேருக்கு பரிசோதனை செய்ததில் 53 பேருக்கு புற்றுநோய் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# கோவையில் வெடிகுண்டு மிரட்டலால் போலீசார் உஷார்

கோவை, அக். 7

கோவை அவினாசி ரோட்டில் உள்ள 3 ஓட்டல்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இதையடுத்து போலீசார், வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்பநாயுடன் அங்கு விரைந்து சென்று சோதனையில் ஈடுபட்டனர். ஆனால் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது.

வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட ஓட்டல் ஒன்றில் முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு ஆகியோர் பங்கேற்ற நிகழ்ச்சி நடந்தது. இதனால் போலீசார் அந்தஓட்டலில்தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கண்காணித்தனர்.

ஓட்டல்களுக்கு வந்த இமெயில் மிரட்டலில் கோவை கார் குண்டு வெடிப்பில் பலியான ஜமேஷா முபினின் பெயரும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஜமேஷா முபின் இறந்து இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி ஐ.எஸ்.அமைப்பினர் அந்த ஓட்டல்களில் வெடிகுண்டு வைத்துள்ளதாகவும், காலை 10.30 மணிக்கு வெடிக்கும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

வெடிகுண்டு சோதனையில் அது புரளி என்றாலும் அதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது, தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதால் போலீசார் உஷாராக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

காரணம் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளிக்கு முந்தைய நாள் தான் கோவையில் கார்குண்டு வெடித்து ஜமேஷா முபின் பலியானான். கோவையில் தீபாவளி கூட்டத்தில் கார் வெடிகுண்டை வெடிக்கச் செய்து பெரும் நாசவேலையில் ஈடுபட திட்டமிட்டு இருந்த நிலையில் அந்தசதியில் ஜமேஷா முபினே சிக்கி பலியானான்.

இந்த சம்பவம் தொடர்பாக என்.ஐ.ஏ. அதிகாரிகள் தொடர்ந்து விசாரித்து வருகிறார்கள். இதுதொடர்பாக 5க்கும் மேற்பட்ட முறை என்.ஐ.ஏ. அதிகாரிகள் மாநிலம் முழுவதும் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். ஜமேஷா முபினுடன் தொடர்பில் இருந்த பலர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்தநிலையில் தற்போது தீபாவளி பண்டிகை வருகிற 31ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக புதுத்துணிகள், நகைகள் எடுப்பதற்காக கோவையின் முக்கிய வீதிகளில் பொதுமக்கள் இப்போதே கூடத் தொடங்கி விட்டனர். இதை கருத்தில் கொண்டு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

மக்கள் அதிகம் கூடும் கோவை ஒப்பணக்கார வீதி, பெரிய கடை வீதி, ராஜவீதி மற்றும் காந்திபுரம் கிராஸ் கட் ரோடு, 100 அடி ரோடு போன்ற இடங்களில் ஏராளமான போலீசார் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். மேலும் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு அதில் நின்றவாறும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.

பொதுமக்கள் தங்கள் உடைமைகளை பாதுகாப்பாக பார்த்துக் கொள்ளுமாறும், சந்தேக நபர்கள் யாராவது தென்பட்டால் போலீசாருக்கு தகவல் தெரிவிக்குமாறும் ஒலிபெருக்கிகள் மூலம் போலீசார் அறிவுறுத்திவருகிறார்கள்.

தீபாவளியை நெருங்கும் வேளையில் ஆயிரக்கணக்கான போலீசாரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# பழனியில் சாமி தரிசனத்திற்காக குவிந்த பக்தர்கள்

பழனி, அக். 7

தமிழ்கடவுள்முருகனின் 3ம் படை வீடான பழனிக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து பக்தர்கள் வருகின்றனர்.



தைப்பூசம், வைகாசி விசாகம், சூரசம்ஹாரம் உள்பட முக்கிய திருவிழாவின் போது ஏராளமான பக்தர்கள் பழனியில் குவிகின்றனர்.

மேலும் விடுமுறை நாட்களில் அதிக அளவில் பக்தர்கள் வருவதால் வருடம் முழுவதும் திருவிழா க்கோலம் பூண்டு காணப்படுகிறது. காலாண்டு விடுமுறை முடிவடைந்து இன்று பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஏராளமானோர் குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்ய பழனிக்கு படையெடுத்தனர்.

இதனால் பஸ்நிலையம், அடிவாரம், கிரிவீதி உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. மேலும் படிப்பாதை, யானைப்பாதை, வின்ச்நிலையம், ரோப்கார் நிலையம் உள்ளிட்ட இடங்களிலும் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

மலைக்கோவிலில் ஏராளமானோர் திரண்டனர். பொது தரிசனம், சிறப்பு தரிசனங்களிலும் நீண்ட வரிசை காணப்பட்டது. நீண்ட நேரத்திற்கு மேலாக காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

மலைக்கோவிலில் பக்தர்கள் வசதிக்காக பல்வேறு உதவி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் இன்று பாதவிநாயகர் கோவில் அருகே தகவல் மையம், முதல் உதவி மையம், குழந்தைகள் பாலூட்டும் அறை பூஜை செய்து திறக்கப்பட்டது.

இந்த வசதிகளை பக்தர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

நவராத்திரி விழாவையொட்டி பெரிய நாயகியம்மன் கோவில், சண்முகபுரம் சித்தி விநாயகர் கோவிலில் கொலு வைக்கப்பட்டு பூஜைகள் நடைபெற்றது. இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

# அருங்குருக்கை கிராமத்தில் தெருக்களில் ஓடும் சாக்கடை நீர் பலமுறை நடவடிக்கை எடுக்காத ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்து கிராமப் பெண்கள் தெருக்களில் நாற்று நட்டு போராட்டம்

திருவெண்ணைநல்லூர் அருகே அருங்குருக்கை கிராமத்தில் தெருக்களில் ஓடும் சாக்கடை நீர் பல முறை நடவடிக்கை எடுக்காத ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்து கிராமப் பெண்கள் தெருக்களில் தேங்கி நிற்கும் சாக்கடையில் நாற்று நட்டு போராட்டம் விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட அருங்குருக்கை கிராமத்தில் 2000 க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் இந்த நிலையில் அருங்குருக்கை கிராமத்தில் தெற்கு தெரு மன்மதன் கோவில்



தெரு, பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு உள்ளிட்ட சாலைகளில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக சாக்கடை நீருடன் கலந்து மழை நீர் தேங்கி நிற்கிறது இதனால் துர்நாற்றம் வீசி பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது இதனை அடுத்து இது குறித்து பலமுறை ஊராட்சி நிர்வாகத்திடம் புகார் அளித்தோம் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் ஆத்திரமடைந்த இன்று கிராம பெண்கள் அனைவரும் ஒன்று திறந்து சாலைகளில் தேங்கி இருக்கும் சாக்கடையில் நாற்று நட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் தொடர்ந்து இனி நடவடிக்கை எடுக்கா விட்டால் அடுத்த கட்ட போராட்டமாக மறியல் போராட்டம் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் உள்ளிட்ட போராட்டத்தில் ஈடுபட போவதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்

இதனால் அங்கு பரபரப்பு நிலவியது

# டேக்வாண்டோ போட்டியில் விழுப்புரம் மாணவர்கள் தங்கம் வென்று சாதனைகள்

விழுப்புரம், அக்.7

கோவாவில் நடைபெற்ற உலக அளவிலான டேக்வாண்டோ விளையாட்டு போட்டியில் 7 நாடுகள் கலந்து கொண்ட டேக்வாண்டோ போட்டியில் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த மாணவ மாணவிகள் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் பதக்கங்களை வென்றனர். இப்போட்டிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்



என பயிற்சியாளர் பாலகணேசன் ஜெகதீஸ்வரன் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

# மெரினாவில் காணும் பொங்கலை மிஞ்சிய மக்கள் கூட்டம்

சென்னை, அக். 7

மெரினா கடற்கரையில் காணும் பொங்கல் தினத்தில்தான் மக்கள் அதிக அளவில் வருவார்கள். அப்போது மாலை நேரத்தில் வெயில் ஓய்ந்த பிறகே மக்கள் கூட்டம் காணப்படும்.



ஆனால்இன்றுகொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் காணும் பொங்கலை மிஞ்சும் அளவுக்கு பொதுமக்கள்வயது வித்தியாசம் இன்றி கடறகரை முழுவதும் திரண்டிருந்ததை காண முடிந்தது.

இதனால் கடற்கரை மணற்பரப்பே தெரியாத அளவுக்கு மெரினா கடற்கரை மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது.

குழந்தைகளை தவற விட்டு தவித்த பரிதாபம் மெரினா கடற்கரையில் கட்டுக்கடங்காத கூட்டம் அலை மோதியது. சாகச நிகழ்ச்சியை கண்டு ரசிப்பதற்காக குடும்பத்தோடு பலரும் வந்திருந்தனர். இவர்களில் பலர் தங்களது குழந்தைகளை தொலைத்து விட்டு கண்ணீருடன் தேடி அலைந்தது பரிதாபத்தை ஏற்படுத்தியது.

# மதுரை கள்ளந்திரி கால்வாயில் சிக்கிய விழுப்புரம் சுற்றுலாப் பயணி உயிரிழப்பு

மதுரை, அக். 7

மதுரை கள்ளந்திரி கால்வாய் தண்ணீரில் சிக்கிய விழுப்புரம் சுற்றுலாப் பயணி உயிரிழந்தார்.

விழுப்புரம் கே.கே. ரோடு பகுதியைச் சேர்ந்தவர் செபஸ்டீன். இவரது மகன் செல்வராஜ் (35). இவர், விழுப்புரத்தில் கறிக்கடை ஒன்றில் பணிபுரிந்தார். இவர் உட்பட 15 நபர்கள் வேன் ஒன்றில் மதுரைக்கு சுற்றுலா வந்தனர். இன்று காலை இவர்கள் அழகர்கோயிலுக்குச் செல்லும் வழியில் கள்ளந்திரி கால்வாயில் குளிக்கச் சென்றுள்ளனர். அப்போது கால்வாயில் இறங்க முயன்ற செல்வராஜ் எதிர்பாராத விதமாக தடுமாறி விழுந்துள்ளார்.

அவருக்கு நீச்சல் தெரியாததால் தண்ணீரில் சிக்கி இழுத்துச் செல்லப்பட்டார். இது குறித்த தகவலின் பேரில் ஒத்தக்கடை, அப்பன் திருப்பதி போலீஸார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் செல்வராஜை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில், ஒத்தக்கடை அருகே கைலாசபுரம் பகுதியிலுள்ள கால்வாயில் செல்வராஜின் உடல் நேற்று மதியம் (ஆக.5) மீட்கப்பட்டு, மதுரை அரசு மருத்துமவனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பாக யா.ஒத்தக்கடை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



மதுரை மாவட்டம் அழகர் கோவில் ரோடு சுந்தர்ராஜன் பட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை சிறந்த முறையில் மாபெரும் இரட்டை மாட்டு வண்டி பந்தயம் திரு நேரு பாண்டியன் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது விழாவின் துவக்க நிகழ்ச்சியை திரு மாண்புமிகு பத்திரப்பதிவு துறை அமைச்சர் பி மூர்த்தி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது விழாவின் முடிவில் சிறந்த மாட்டு வண்டி வீரர்களுக்கு பரிசுகள் முதல் மூன்று இடங்களுக்கு வழங்கப்பட்டது சிறப்பு பரிசாக நான்காவது வந்த மாட்டு வண்டிகளுக்கும் வீரர்களுக்கும் சிறப்பு பரிசு வழங்கப்பட்டது இவ்விழாவில் அனைத்து ஏற்பாடுகளும் நேரு பாண்டியன் அவர்கள் முன் நின்று முடித்து வைத்தார்

# விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியில் அரசு பள்ளியில் படித்த மாணவர் சேர்க்கை


விழுப்புரம், அக். 7

அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கு 7.5% ஒதுக்கீட்டில் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவர் சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது. விழுப்புரம் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஒதுக்கீட்டின்படி 7.5% இட ஒதுக்கீடு வழங்கப் பட்டு அரசு வருகிறது. அதனடிப்படையில் கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் ரமா



தேவி சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கினார். விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியில் 2024 25ம் ஆண்டிற்கான மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற்றது. இதில் 6 மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை மருத்துவ மாணவர்களுக்கான ஒதுக்கீடு வழங்கப் பட்டு அவர்களுக்கு விழுப்புரம் மருத்துவக் இந்நிகழ்ச்சியில் கல்லூரி துணை முதல்வர் தரணி கல்லூரி, நிர்வாக அலுவலர் கவிஞர் சிங்காரம், இளநிலை நிர்வாக அலுவலர் வத்சன். அலுவலக கண்காணிப்பாளர் கோபிநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

# ஜானி மாஸ்டரின் தேசிய விருது நிறுத்தி வைப்பு இடைக்கால ஜாமின் பெற்றது வீண்



தமிழ், தெலுங்கு திரை உலகில் பிரபல நடன இயக்குநரான ஜானி மீது கடந்த மாதம் பெண் நடன கலைஞரான 21 வயது இளம்பெண் ஒருவர் பாலியல் பலாத்கார புகார் கொடுத்தார். இதையடுத்து ஜானி மீது 3 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்த போலீசார் தலைமறைவாக இருந்தவரை தேடி வந்தனர். இதனை தொடர்ந்து கோவாவில் வைத்து ஜானியை தெலுங்கானா போலீசார் கைது செய்தனர்.

இதையடுத்து, புகார் கொடுத்த பெண் மைனராக இருக்கும் போதிருந்தே அவரை பாலியல் வன்கொடுமை செய்ததாக ஜானி மாஸ்டர் போலீசாரிடம் ஒப்புக்கொண்டதாக கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஜானி மாஸ்டர் ஜாமின் கோரியிருந்தார். மனுவை விசாரித்த நீதிமன்றம் ஜாமின் பெறுவதற்கு ரூ. 2 லட்சத்திற்கான உத்தரவாதத்தை இருவர் அளிக்க வேண்டும், ஊடகங்களில் பேட்டி எதுவும் கொடுக்க கூடாது, மற்றொரு இடைக்கால ஜாமின் பெறக்கூடாது போன்ற நிபந்தனைகளை விதித்து ஜானி மாஸ்டருக்கு 5 நாட்கள் இடைக்கால ஜாமின் வழங்கினர்.

இந்த நிலையில், நாளை மறுநாள் தேசிய விருந்துகள் வழங்கும் விழா நடக்கவிருந்த நிலையில், ஜானிக்கான தேசிய விருது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜானிக்கு 2022 ஆம் ஆண்டு வெளியான "திருச்சிற்றம்பலம்" படத்தில் இடம்பெற்ற "மேகம் கருக்காதா" பாடலுக்காக தேசிய விருது அறிவிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

# சகீப் பாய் இல்லையென்றாலும் இந்தியாவை வீழ்த்துவோம் வங்கதேச வீரர் நம்பிக்கை



இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட வங்கதேசம் முதலாவதாக நடைபெற்ற டெஸ்ட் தொடரில் 2 0 (2) என்ற கணக்கில் படுதோல்வியை சந்தித்தது. அதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு எதிராக வங்கதேசம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது.

அத்தொடரின் முதல் போட்டி இன்று குஜராத் மாநிலத்தில் இருக்கும் குவாலியர் நகரில் துவங்குகிறது.


இந்நிலையில் டி20 கிரிக்கெட்டில் ஓய்வு பெற்ற தங்கள் அணியின் ஜாம்பவான் சாகிப் அல் ஹசனை வங்கதேச அணி மிஸ் செய்யும் என்று அந்நாட்டின் வீரர் தவ்ஹீத் ஹ்ரிடாய் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

டி20 என்பது ரன்களை பொறுத்ததாகும். அதில் ஒவ்வொரு அணியும் பெரிய ரன்கள் குவிக்க விரும்புவார்கள். இந்த மைதானத்தில் நீண்ட காலமாக எந்தப் போட்டியும் நடைபெறவில்லை. இது புதிய மைதானம். எனவே இங்குள்ள சூழ்நிலை என்ன என்பது எங்களுக்குத் தெரியவில்லை. பயிற்சி ஆடுகளத்தை பார்க்கும் போது பிட்ச் ஸ்லோவாக இருக்கும் என்று தெரிகிறது.

இது போன்ற சூழ்நிலையில் பெரிய ஸ்கோர் அடிப்பதற்கு வாய்ப்பில்லை. ஐபிஎல் போட்டிகளும் நடைபெறவில்லை. சர்வதேச கிரிக்கெட்டில் எப்போதும் அழுத்தம் இருக்கும். ஆனால் அதைப்பற்றி சிந்தித்தால் சிறப்பாக செயல்பட முடியாது. எப்படி அசத்த முடியும் என்பதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். ஷாகிப் பாய் இல்லை. அவரை நாங்கள் மிஸ் செய்வோம். ஆனால் அனைவரும் ஒருநாள் சென்றாக வேண்டும். இருப்பினும் அவர் இல்லாமலேயே நாங்கள் இந்தியாவை வீழ்த்துவோம் என்று நம்புகிறோம் எனக் தவ்ஹீத் ஹ்ரிடாய் கூறினார்.

# பிளாக் டிரெஸில் கிக் ஏற்றிய தனுஷ் பட நடிகை வைரலாகும் புகைப்படம்



'வாத்தி' படத்தில் தனுசுக்கு ஜோடியாக நடித்து பிரபலமானவர் சம்யுக்தா. இவர் தெலுங்கிலும் பல படங்கள் நடித்து முன்னணி நடிகையாக இருக்கிறார். மலையாளம், கன்னடத்திலும் படங்கள் நடிக்கிறார்.

படங்கள் நடிப்பது போலவே, சமூக வலைதளங்களிலும் சம்யுக்தா மேனன் சுறுசுறுப்பாக இருக்கிறார். இன்ஸ்டாகிராமில் தினந்தோறும் தனது அன்றாட நடவடிக்கைகள் குறித்து ரசிகர்களுக்கு தெரியப்படுத்தி வருகிறார்.

அவ்வப்போது ரசிகர்களுடன் கலந்துரையாடவும் செய்கிறார். வாட்டசாட்டமான நடிகை என்று வர்ணிக்கப்படும் சம்யுக்தாவை, இன்ஸ்டாகிராமில் 30 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பின்தொடருகிறார்கள்.

இதற்கிடையில் சமீபத்தில் கருப்பு நிற உடையில் தனது கவர்ச்சி புகைப்படங்களை சம்யுக்தா வெளியிட்டுள்ளார். இந்த படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சம்யுக்தாவின் அழகை புகழ்ந்து ரசிகர்கள் கருத்துகளை அள்ளி தெளிக்க, அம்மணி படுகுஷியாம்.

# வங்கதேச தொடரில் சாம்சனுக்கு புதிய பொறுப்பு சூர்யகுமார் யாதவ்



இந்தியாவங்கதேச அணிகள் இடையிலான முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி குவாலியரில் இன்று நடக்கிறது. வங்கதேச கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் மோதிய 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 20 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இதைத்தொடர்ந்து இந்தியாவங்கதேச அணிகள் இடையிலான 3 போட்டி கொண்ட 20 ஓவர் தொடர் நடைபெறுகிறது. இதில் முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி மத்தியபிரதேச மாநிலம் குவாலியரில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீமந்த் மாதவ்ராவ் சிந்தியா கிரிக்கெட் ஸ்டேடியத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது.

இந்நிலையில்இந்ததொடரில்இந்தியஅணியின்தொடக்க வீரர்களாக சஞ்சு சாம்சன் அபிஷேக் சர்மா களமிறங்குவார் என இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பை சஞ்சு சாம்சன் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.



# வெற்றி என்றால் வித்தியாசம் பாக்யராஜ் புகழாரம்

S பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் ஆர். சிவா எழுதி, இயக்கி, தயாரித்திருக்கும் 'ஆலன்' எனும் திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. இயக்குநர் ஆர். சிவா இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'ஆலன்' எனும் இந்த திரைப்படத்தில் வெற்றி, மதுரா, அனு சித்தாரா, கருணாகரன், விவேக் பிரசன்னா, 'அருவி' மதன் குமார் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். விந்தன் ஸ்டாலின் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு அறிமுக இசையமைப்பாளர் மனோஜ் கிருஷ்ணா இசையமைத்திருக்கிறார்.

நடிகர் வெற்றி பேசுகையில், '' ஆலன் திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியிட்டு விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திரைப்படத்தில் கதாநாயகனாக நடிப்பதற்கு எனக்கு வாய்ப்பளித்த இயக்குநர் தயாரிப்பாளர் சிவாவிற்கு நன்றிதெரிவித்துக்கொள்கிறேன். இயக்குநர்கே. பாக்யராஜ்பேசுகையில், ''வெற்றிஎன்றுசொன்னால்வித்தியாசமான கதையை தேர்வு செய்து நடிப்பவர் என்ற ஒரு எண்ணம் அனைவரிடத்திலும் இருக்கிறது எனக்கும் அந்த எண்ணம் இருக்கிறது. இந்தப் படத்தை தேர்வு செய்து நடித்ததற்காக நடிகர் வெற்றிக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது இந்த வெற்றிப் பயணத்தை மாற்றிக் கொள்ளாமல்... புதிய முயற்சிக்கு மேற்கொள்ளுங்கள். இதுவும் காதல் கதை தான். ஆனால் இதிலும் கமர்ஷியல் கலந்திருக்கிறது. '' என்றார்.

# சீனா ஓபன் டென்னிஸ்: இரட்டையர் பிரிவில் இறுதிக்கு முன்னேறியது இத்தாலி ஜோடி



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சீனா ஓபன் டென்னிஸ் தொடர் சீனாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடந்த பெண்கள் இரட்டையர் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலியின் ஜாஸ்மின் பவுலோனி, சாரா எர்ரானி ஜோடிஅமெரிக்காவின் மேடக் சாண்ட்ஸ், சோபியா கெனின் ஜோடியுடன் மோதியது.

இதில் இத்தாலி ஜோடி 63, 16, 104 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் இத்தாலி ஜோடி, தைவானின்சான்ஹாவ்சிங், ரஷியாவின்வெரோனிகா ஜோடி உடன் பலப்பரீட்சை நடத்துகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.